**O.S. No. : 83/2025**

Dated: 18.06.2026

**வா.சா.1: ராமகிருஷ்ணன் ; த/பெ. கரியன் (இறப்பு)**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. எனது தகப்பனார் பெயர் கரியன் ஆகும். எனது தகப்பனார் எப்போது காலமானார் என்றால் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் தேதி காலமானார். எனது தாயார் 03.03.2025 அன்று காலமானார். இந்த வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் எனது சகோதரிகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் காலமான பிறகு எனது தாயார் யாருடைய பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் எனது மற்றும் எனது தம்பி ரவிச்சந்திரன் ஆகியோரின் பராமரிப்பில் இருந்து வந்தார்.

2. நான் கூறுவது உண்மையல்ல என்றும், எனது தாயார் பிரவாதிகளின் பராமரிப்பில்தான் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் 1985 ஆம் ஆண்டு இறந்த பிறகு அவரது சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் **சாட்சி முதலில் சரிதான் என்று சாட்சியம் அளித்துவிட்டு, பின்பு தான் திருமணம் செய்த பின்புதான் சொத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறார்.**

3. அவ்வாறு நான் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக கூறுவது எந்த வருடத்தில் என்றால் 1993 ஆம் ஆண்டு ஆகும். 1993 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை செய்யப்படும்போது எனது தாயாருக்கு சொத்து ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. எனது தகப்பனார் 1985 ஆம் ஆண்டு இறந்த பிறகு நடைபெற்ற பாகப்பிரிவினையில் வழக்கு சர்வே எண்ணில் 60 சென்ட் பூமியானது எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4. அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்தினை எனது தாயார், எனது சகோதரிகளின் பராமரிப்பில் இருந்து வந்ததால் 15.06.2005 தேதியில் எனது சகோதரிகள் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அவ்வாறு உயில் எழுதப்பட்டது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி 60 சென்ட் பூமியில் எனது தாயார் உயிருடன் இருக்கும்வரை அவர்தான் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றும், எனது தாயார் இறந்த பிறகு எனது சகோதரிகளான பிரதிவாதிகள்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல, பாகப்பிரிவினையில் அந்த சொத்து எங்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டது.

5. எனது தாயார் இறந்தபோது நான் ஈமகிரியைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, நான்தான் அந்த சடங்கினை செய்தேன். நான் இந்த வழக்கில் நானும், எனது சகோதரரும் தலா 45 சென்ட் பூமியை பாகப்பிரிவினை செய்துகொண்டதாக கூறும்

நிலையில் எனது தம்பியின் பூமி எந்த திசையில் உள்ளது என்றால் எனது பாகத்திற்கு கிழக்கில் வலதுபுறமாக எனது தம்பியின் பாகம் உள்ளது. எனது தம்பியின் பெயர் ரவிச்சந்திரன் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் காட்டப்பட்டுள்ள சொத்து விவரத்தில் வழக்கு சொத்தின் நான்கு எல்லைகளில் எந்த எல்லையில் ரவிச்சந்திரனின் பாகம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், வழக்கு சொத்து விவரத்தில் மொத்த 90 சென்ட் பூமிக்கான எல்லைகள்தான் காட்டப்பட்டுள்ளது.

6. உண்மையில் நான் கூறுவதுபோல 45 சென்ட் பாகப்பிரிவினை செய்து அதில் நான் சுவாதீனத்தில் இருந்திருந்தால் வழக்கு சொத்து விவரத்தில் எனது தம்பியின் பாகத்தை காட்டியிருப்பேன் என்றும், உண்மையில் பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்பதால்தான் அவ்வாறு வழக்கு சொத்து விவரத்தில் காண்பிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7. வழக்கு புல எண்ணில் 60 சென்ட் பூமி எனது தாயாருக்கு சொந்தமானது என்றும், அதை அவர் எனது சகோதரிகளுக்கு உயில் மூலம் கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் நான் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கினை எனக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று காண்பிக்க இந்த வழக்கில் எந்தவிதமான ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்தினால் மட்டும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.18 18:10:32 +0530